# 7 குலமுதுவர் ஈசாக்



படம் 7.1 - ஈசாக்கின் பிறப்பு

## ஈசாக்கின் பிறப்பு

ஆண்டவர் தாம் கூறியிருந்தபடி சாராவைக் கண்ணோக்கினார். ஆண்டவர் தம் வாக்குறுதிக்கேற்ப சாராவுக்குச் செய்தருளினார். கடவுள் வாக்களித்தபடி குறிப்பிட்ட அதே காலத்தில் சாரா கருத்தாங்கி ஆபிரகாமுக்கு அவரது முதிர்ந்த வயதில் ஒரு மகனைப் பெற்றெடுத்தார். ஆபிரகாம் தமக்குப் பிறந்த, சாரா தமக்குப் பெற்றுக் கொடுத்த மகனுக்கு ''ஈசாக்கு'' எனப் பெயரிட்டார். கடவுள் கட்டளையிட்டபடி ஆபிரகாம் தம் மகன் ஈசாக்குப் பிறந்த எட்டாம் நாளன்று அவனுக்கு விருத்த சேதனம் செய்தார். அவருடைய மகன் ஈசாக்கு அவருக்குப் பிறந்த பொழுது அவருடைய வயதோ நூறு. அப்பொழுது சாரா ''கடவுள் என்னைச் சிரிக்க வைத்தார் என்றும் இதைக் கேட்கும் அனைவரும் என்னோடு சேர்ந்து சிரிப்பர்'' என்றும் சொன்னார்.

தொ. நூ. 21 : 1 - 6



இலவச விநியோகத்திற்காக

ஆபிரகாம் - சாராவுக்கு ஈசாக் பிறந்தபோது ஆபிரகாமின் வயது 100. சாராவுக்கு 90 வயது(தொ. நூ 17 : 17). ஆண்டவரால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை என்பது இதன் மூலம் காட்டப்படுகிறது. அதனால் நாம் ஆண்டவரில் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும். ஈசாக் என்ற பெயரின் கருத்து ''சிரித்தல்'' என்பதாகும். ஈசாக்கும் ஓர் குலமுதுவராவார்.



**படம் 7.2 - ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடுதல் (தொ.நூ 22 :1 -19)**

ஆண்டவர் :- ஆபிரகாம், உனது ஒரே மகன் ஈசாக்கை அழைத்துக் கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரி பலியாக அவனை எனக்குப் பலியிடு.

ஆபிரகாம் :- மகனே ஈசாக் எரிபலி ஒப்புக் கொடுப்பதற்காக விறகு களை எடுத்துக் கொண்டு மோரியாவுக்குச் செல்வோம்.

ஈசாக் :- சரி அப்பா, நான் விரைவாகச் சென்று ஆயத்தமாகிக் கொண்டு வருகின்றேன்.

ஆபிரகாம் :- நல்லது, மகனே - வா நாம் செல்வோம். (ஆபிரகாம் தகனப் பலிக்காக ஆயத்தம் செய்த விறகை ஈசாக்கின் கையில் கொடுத்தார். தமது கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக் கொண்டார். இருவரும் புறப் பட்டுச் சென்றனர்.)

ஈசாக் :- அப்பா! இங்கே விறகு உண்டு. நெருப்பும் உண்டு. ஆனால் பலிக்கான ஆட்டுக் குட்டி எங்கே?

ஆபிரகாம் :- மகனே! அதனை ஆண்டவர் தருவார். (ஆண்டவர் கூறிய இடத்திற்கு வந்ததும் ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்து விறகுக் கட்டைகளை அதன்மேல் அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கை கட்டிப் பீடத்தின் மீதிருந்த விறகுக் கட்டைகளின் மேல் கிடத்தினார். பின் தன் மகனைக் கொல்வதற்காகக் கத்தியைக் கையில் எடுத்தார்.)

வானதூதர் :- ஆபிரகாம், பையன் மேல் கை வைக்காதே. உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என் பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று அறிந்து கொண்டேன்.

(ஆபிரகாம் முட்செடியில் கொம்பு மாட்டிக் கொண்டு நின்ற ஓர் ஆட்டுக் கிடாயைக் கொண்டு வந்து தன் மகனுக்குப் பதிலாக எரிபலியாக ஒப்புக் கொடுத்தார்.)

கானான் நாட்டிலே மக்கள் தம் தலைச்சன் பிள்ளைகளை இறைபலியாக வேறு தேவர்களுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட ஆயத்தமாகும்போது ஆண்டவர் அதனைத் தடுத்தார். அதற்காக ஆட்டுக் கிடாயை அவருக்குக் கொடுத்தார். இதன் மூலம் அன்று நடைமுறையிலிருந்த பிள்ளைகளைப் பலியாக ஒப்புக் கொடுக்கும் சம்பிரதாயத்தை இஸ்ரயேலர் செய்யக் கூடாது என ஆண்டவர் காட்டுகின்றார். இறை வாக்குறுதிக்கேற்ப ஓர் இனத்தைக் கட்டியெழுப்புவதற்கிருந்த தமது ஒரே மகனைப் பலியாக ஒப்புக் கொடுக்குமளவுக்கு ஆபிரகாம் கீழ்ப்படிவதற்குக் காரணம் ஆண்டவரில் அவருக்கிருந்த அன்பும் நம்பிக்கையுமாகும்.

ஈசாக்கும் தன் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இறைசித்தத்தை நிறைவேற்றுவதற்காகத் தன்னைக் கையளித்தார் என்பது தெளிவாகின்றது. நாமும் ஈசாக்கைப் போல் பெற்றோருக்குக் கீழ்படிந்து நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும். ஆண்டவரில் நம்பிக்கை வைத்து நல்ல பிள்ளைகளாக நாம் வாழ வேண்டும் என்பதையே ஆண்டவர் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். அன்று ஆபிரகாமிடம் எதிர்ப்பார்த்ததைப் போல் இன்று கிறிஸ்தவர்களாகிய எம்மிடமும் அர்ப்பணத்துடன் கூடிய வாழ்வையே எதிர்பார்க்கின்றார்.


## ஈசாக் மூலம் உடன்படிக்கையைப் புதுப்பித்தல்

ஈசாக்கின் வேலைக்காரர் நீர்ப்படுகையில் தோண்ட, அங்கே பொங்கியெழும் நீரூற்றைக் கண்டனர். ஆனால் கெராரில் இருந்த மேய்ப்பர்கள் ஈசாக்கின் மேய்ப்பர்களோடு, ''இந்தத் தண்ணீர் எங்களதே'' என்று வாதாடினர். மீண்டும் அவர்கள் வேறொரு கிணறு தோண்டினர். முன்புபோல் அதைப் பற்றியும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர் அவ்விடத்தை விட்டகன்று வேறொரு கிணற்றைத் தோண்டினார். இம்முறை வாக்குவாதம் ஒன்றும் ஏற்படாததால் ''ஆண்டவர் நம் எல்லையை விரிவுப்படுத்தியுள்ளார். நாட்டில் நாம் வளர்ச்சியுறுவோம்'' என்று சொல்லி அதற்கு ''இரகபோத்து'' என்று பெயரிட்டார். பின் அவர் அவ்விடத்திலிருந்து பெயேர்செபாவுக்குப் போனார். அன்றிரவு ஆண்டவர் அவருக்குத் தோன்றி, ''உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே. அஞ்சாதே. ஏனெனில் நான் உன்னோடு இருக்கின்றேன். உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்'' என்றார். எனவே ஈசாக்கு அங்கே ஒரு பலிபீடம் எழுப்பி, ஆண்டவரது திருப்பெயரைப் போற்றினார்.

(தொ.நூ. 26 : 19 - 25)

ஈசாக்கின் மேய்ப்பர்கள் கிணறு தோண்டும்போது கெராரில் இருந்த மேய்ப்பர்கள் ''இந்தத் தண்ணீர் எங்களதே'' என்று ஈசாக்கின் மேய்ப்பர்களோடு வாதாடினர். அதற்கு ஈசாக் காட்டிய பதிலளிப்பு முக்கியமானது. ஈசாக் அவர்களோடு சண்டையிடவில்லை. மாறாகத் தனது மேய்ப்பர்களிடம், வேறு இடத்தில் கிணறு தோண்டுமாறு கூறினார். அதன்படி நாமும் பிறரோடு சண்டையிடக் கூடாது என்பதற்கு ஈசாக் எமக்கு மாதிரிகையாக இருக்கின்றார்.

ஆண்டவர் ஈசாக்கை வலிமைப்படுத்தி ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீண்டும் புதுப்பிக்கின்றார். அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன். உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழி மரபைப் பெருகச் செய்வேன்'' எனக் கூறி ஆண்டவர் ஈசாக்கை வலிமைப்படுத்தினார்.




இன்று நாம் வாழுகின்ற குடும்பத்தில், பாடசாலையில், சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குப் பதிலாய் அமைவது, சமாதானத்துடன் கூடிய வாழ்க்கை முறையே என்பதை ஈசாக் எமக்கு நினைவுறுத்துகின்றார்.

## செயற்பாடு

1. ஈசாக் என்பதன் கருத்து யாது?
2. வீட்டிலே உமது பெற்றோருக்குக் கீழ்படியும் நல்ல பிள்ளையாக செயற்படும் மூன்று சந்தர்ப்பங்களை எழுதுக.
3. வாழ்வின் பிரச்சினைகளின்போது சமாதானத்துடன் செயற்படுவதற்கு உம்மில் இருக்க வேண்டிய நற்பண்புகள் மூன்றை எழுதுக.
4. ஈசாக்கிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டை எழுதுக.
5. ஈசாக்கின் வாழ்விலிருந்து நீர் பெறக்கூடிய மாதிரிகைகள் மூன்றை எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

- ö£Ø÷Óõ¸USU RÌ£i²® |À» ¤ÒøÍPÍõP ÁõÊ[PÒ.
- ¤Ó÷µõk Jzxø Çzxa ö\¯»õØÖ[PÒ.
- ÁõÌUøP°À HØ£k® xß£ ÷ÁuøÚPøÍ¨ ö£õÖø©²hß \Qzx ÁõÇ¨ £ÇS[PÒ.